நேரத்தில் சில தாய்மார்கள் 2 அல்லது 3 குழந்தைகள் பெற்றுவிடுகிறார்கள். அதைத் தடுக்க முடியுமா? மேலும் வெளி நாட்டில், திருமணம் ஆகாமலேயே இன்ஜெக்சன் மூலமாக குழந்தைகள் பிறப்பதாகச் சொல்கிறார்கள். அது அமைச்சருக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திடீரென்று 3 குழந்தைகள் பெற்றுக்கொள்பவர்களை நாம் ஒன்றும் செய்ய முடியாது. அது நம் கையிலே இல்லை. ஆனால் இந்த இன்ஜக்சன் மூலமாக பரிட்சார்த்தமாக நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். It is still in expe imental stage.

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமணம் ஆகாதவர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்கிறார்கள். அதைச் சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்கிறார்கள். அவர்களாகவே பெட்டிசன் கொடுத்தால் கவனிக்கப்படும் என்று சொன்னார்கள். சட்டமன்ற உறுப்பினர்களிடம் சொல்லுகின்ற காரணத்தால்தான் சட்டமன்ற உறுப்பினர்கள இங்கே சொல்கிறார்களே ஒழிய வேறு அல்ல. அடுத்து இன்றைய தினம் இந்த அறுவைச் சிகிச்சையைப் பொறுத்தவரையில், அதைச் செய்தவர்களுக்கே மீண்டும் செய்வதாகச் சொல்கிறார்கள். அதாவது செய்த கேசுக்கே திரும்பச் செய்கிறார்கள். இதுபோன்ற தவறான புள்ளி விவரங்களைக் கொடுத்துக்கொண்டு இருக்கின்ற அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா? இதுவரையில் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறதா? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முன் பகுதியில் சொல்லியிருக்கக்கூடிய கருத்து அரசாங்கம் ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்தாக இருக்கிறது. இரண்டாவது பகுதியில் அவர்கள் எழுப்பி இருக்கக்கூடிய கேள்வி நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறதா என்பது, ஏராளமான தவறுகள் செய்தவர்கள் மீது தாட்சண்யம் இல்லாமல் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் சொள்கிறேன்.

நவீன அரிசி ஆலைகள்.

770—(*வினா எண். 7796)—**திரு. கா. சொர்ணலிங்கம்:** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1966 மே 13)

(அ) பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் நவீன அரிசி ஆலை ஏற்படுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) மற்றும் (ஆ) ரூபாய் 1 1/4 கோடி செலவில் நாள் ஒன்றுக்கு 100 டன் புழுங்கல் நெல் அரைக்கும் திறன் கொண்ட நவீன அரிசி ஆலை ஒன்று பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில், மானாமதுரையில் சிப்காட்டுக்குச் சொந்தமான நிலத்தில் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தினால் அமைக்கப்படவுள்ளது.

திரு. கா. சொர்ணலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரிசி ஆலையில் எத்தனை பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் தலைவர் அவர்களே, நேரடியாகவும், அதோடு சம்பந்தப்பட்ட வகையிலேயும் சுமார் 200 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் அரிசி ஆலையைப் பற்றி அறிவித்திருக்கிறார்கள். இந்த நவீன அரிசி ஆலை எப்போது வேலையைத் துவங்கும் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, இந்த ஆண்டு இறுதிக்குள், இல்லை என்றால் அடுத்த ஆண்டு முதல் வாக்கில் துவங்கும்.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி: மாண்புமிகு பேரவையின் தலை நாயகர் அவர்களே, இந்த நவீன அரிசி ஆலையைத் தொடங்குகின்ற திட்டங்கள் தமிழக முழுவதும் எத்தனை இடங்களில் தொடங்கி இருக்கிறார்கள்? குறிப்பாக என்னுடைய செங்கை மாவட்டத்தில் தொடங்குகின்றதிட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தைப் பொறுத்தது. இருந்தாலும் மொத்தம் உள்ள நான்கு இடங்களில், தென் ஆர்க்காடும் அதிலே ஒன்று. இடம் தேர்வு செய்யப்பட்டு இருக்கிறது. புதுக்கோட்டை மாவட்டத்திலே ஒன்று. மீதி இரண்டு இடங்களில் இடம் பார்க்கப்பட்டு வருகிறது. அநேகமாக செங்கற்பட்டு மாவட்டத்தில் இல்லை என்றுதான் குறிப்பு இருக்கிறது. காரணம் ஏற்கனவே நவீன அரிசி ஆலை அங்கே இயங்கிக் கொண்டு இருக்கிறது.

1986 [மே 13

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக நவீன அரிசி ஆலைகளை ஏற்படுத்துவதைவிட ஏற்கனவே தமிழ்நாடு முழுவதும் புட் கார்ப்பரேசன் ஆப் இந்தியாவால் நடத்தப்பட்டு வந்த மாடர்ன் ரைஸ்மில்கள் இன்று வேலையில்லாமல் சும்மா இருந்து கொண்டு இருக்கின்றன. அந்த ஆலைகளை புட் கார்ப்பரேசன் ஆப் இந்தியா நம்முடைய மாநிலத்திற்குத் தரத் தயாராக இருப்பதாகவும் சொல்கிறார்கள். அதிலே வேலை செய்பவர்கள் தற்போது வேலை வாய்ப்பு இழக்கக்கூடிய நிலைமை இருந்துகொண்டு இருக்கிறது. எனவே அந்த ஆலைகளை தமிழக அரசு ஏற்றுக்கொண்டு, அவற்றை நடத்துமா? அவற்றில் வேலை செய்பவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு தலைவர் அவர்களே, எப்.சி.ஐ.-யால் நடத்தப்படுகிற நவீன அரிசி ஆலைகளை, தமிழகத்தில் இருக்கிற ஆலைகளை விற்க மத்திய அரசு முன்வந்து, தமிழக அரசு மத்திய அரசின் அதிகாரிகளோடு பேச்சு வார்த்தை நடத்திக்கொண்டு இருக்கிறது. அவர்கள் புக் விலைக்குத் தரவேண்டும் என்று நாம் கேட்டுக்கொண்டு இருக்கிறோம். ஆனால் அவர்கள் அதிக விலையைச் சொல்லிக்கொண்டு இருகிறார்கள். எனவே விலை வித்தியாசத்தினாலே இன்னும் முடிவு ஆகாமல் பேச்சு வார்த்தை தொடர்ந்து நடந்துகொண்டு இருக்கிறது. இதற்கிடையில் அங்கே பணியாற்றிக்கொண்டிருக்கிற அலுவலர்கள் தமிழக அரசு எப்.சி.ஐ. ஆலைகளையெல்லாம் எடுத்துக்கொண்டால் இங்கே பணியாற்றிக்கொண்டிருக்கிற சுமார் 500 பேர், நாங்கள் குஜராத்துக்கோ, உத்திரப் பிரதேசத்துக்கோ, வேறு மாநிலங்களுக்கோ மாற்றப்படக்கூடிய ஒரு அபாயமான நிலைமை ஏற்படும். எனவே நீங்கள் எடுக்கக்கூடாது நிர்வாக அடிப்படையிலே எப்.சி.ஐ.யே நடத்தட்டும் என்று பணியாற்றிக் கொண்டிருக்கிற தொழிலாளர்கள் வேறு இந்தப் பிரச்சனையை எழுப்பி முதல்வர் அவர்களுக்கும், அதிகாரிகளுக்கும் மனுக்களை அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். எல்லாம் சேர்ந்து அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

திரு. க. இரா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நவீன அரிசி ஆலை அமைப்பது சம்பந்தமாக தமிழகத்திலே அதிகமாக இப்போது புரட்சித் தலைவர் ஆட்சி ஏற்பட்டதற்குப் பிறகு தருமபுரி மாவட்டத்திலே 12 நீர்த் தேக்கங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அங்கே விளைகிற நெல்லையெல்லாம் தனியார் ஆலைகளுக்கு கொடுக்கிறார்கள். தனியார் ஆலையிலே பல்வேறு தவறுகள் நடப்பதாகவும், மணல் போன்றவைகள் எல்லாம் அரிசியிலே கலக்கப்படுவதாக அரசுக்குத் ஏதாவது தகவல் வந்திருக்கிறதா? இப்போது தனியாரிடத்திலே கொடுத்து அரிசி ஆக்குகின்ற சூழ்நிலையை மாற்றி தருமபுரி மாவட்டத்திலே இந்த நவீன அரிசி ஆலை ஒன்றை அமைப்பதற்கு அரசினிடத்திலே செயற் குறிப்பு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

[1986 மே 13,

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்முதல் ஆகிற நெல்லில் பெரும் பகுதி—தஞ்சை மாவட்டத்திலேயிருந்தும் ஏகபோக கொள்முதல் பகுதிகளாக இருக்கின்ற திருச்சி, புதுக்கோட்டை போன்ற பகுதிகளிலிருந்தும் ஏறக்குறைய முக்கால்வாசி நெல் கொள்முதல் ஆகிறது; சிவில் சப்ளைஸ் மூலமாக கொள்முதல் ஆகிற நெல்லிலே — ஏற்கனவே இங்கிருந்து கொள்முதல் ஆகின்ற நெல்லை வேறு மாவட்டங்களுக்கு, தொலை தூரங்களுக்கு கொண்டு போனால், அதனால் டிரான்ஸ்போர்ட் செலவும், பல் வேறு செலவுகளும் ஏற்படுகின்றன. அந்த அடிப்படையிலே தஞ்சை மாவட்டத்திலே தான் பெரும்பாலும் துவக்கப்படு கின்றன. இப்போது தஞ்சை மாவட்டத்தையொட்டி இருக் கின்ற சில மாவட்டங்களிலேயும் டிரான்ஸ்போர்ட் மூலமாக அரிசியை மற்ற பகுதிகளுக்கு கொண்டு போவதற்கு வசதியாக இருக்கின்றதன் அடிப்படையிலே, பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தருமபுரி மாவட்டத்தைப் பற்றி சொல்லி இருக்கிறார்கள். அதுபற்றி இப்போது எதுவும் பதில் சொல்ல முடியாது. ஆய்வு செய்து பின்னாலே பதில் தருகிறேன்.

திரு. த. புஷ்பராசு: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்திலே நவீன அரிசி ஆலை தொடங்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி. புதுக்கோட்டை மாவட்டத்தில், எந்த ஊரில், எந்த நாளில் அந்த அரிசி ஆலை தொடங்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த இடத்திலே அமைக்கலாம் என்று அதிகாரிகள் மூலமாக தேர்வு நடத்தப்பட்டு வருகிறது. ஆலங்குளம் பக்கத்திலே இடம் பார்த்திருக்கிறார்கள். வெகு விரைவிலே இடம் முடிவுபெற்று பணிகள் தொடங்கப்படும்.

771—(*வினா எண். 8885)—திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டையில் உள்ள நவீன அரிசி ஆலையை விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) ஆம்.